சுத்தத்திற்கும் சுவைக்கும்
புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு!
சைவ போசனகாரர்
மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில் சந்தி)
288 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | மாசி 10 | ரபி-ஆகி 5 | இதழ் 12
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 22-2-80

RECEIVED 1980-2-22 PERIODICALS DIVISION LIBRARY

பெரியார் சிலை:

## அரசு உத்தரவு நீதிமன்றத்தில் தள்ளுபடி

(சென்னை)

காஞ்சிபுரத்தில் பகுத்தறிவுத் தலைவர் காலஞ்சென்ற ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் சிலை அமைக்க திராவிட கழகத்தின் செங்கற்பட்டு

(8-ம் பக்கம் பார்க்க)

# கடந்த நள்ளிரவு தொடக்கம் சிகரெட், சாராயம், பியர் விலைகள் அதிகரிப்பு!

## பீடி, பிஸ்கட், கைக்கடிகாரம் டெலிவிஷன் இறக்குமதி வரியும் கூடியது

(கொழும்பு)

சகலவிதமான சிகரட்டுகளும் 4 சதத்தினல் அதிகரிக்கப்பட்டுள்ளன. சாராயத்தின் விலை ஒரு போத்தலுக்கு 4 ரூபா வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பியர் போத்தலுக்கு ரூபா 1-50 சதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த நள்ளிரவு முதல் இந்த விலை அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளது.

நேற்றுமாலை பாராளுமன்றத்தில் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் ஜனுப். நெய்னு மரிக்கார் மேற்படி விலை அதிகரிப்புகள் பற்றி அறிவித்தார்.

புகையிலைக்கான கலால்வரி இருத்தல் ஒன்றிற்கு 14 ரூபா 70 சதமாக அதிகரிக்கும். அதனுல் சிகரெட் ஒன்றின்விலை 4 சதத்தால் அதிகரிக்கப்படுகிறது.

சாராயத்தின் கலால் வரி கலனுக்கு 40 ரூபாவாக அதிகரிக்கப்படுவதால் ஒரு போத்தல் சாராயத்தின் விலை 4 ரூபாவால் அதிகரிக்கும்.

பியரின் கலால் வரி கலனுக்கு 9 ரூபாவாக அதிகரிக்கப்படும். இதன்பிரகாரம் ஒரு போத்தல் வெளிநாட்டு பியரின் விலை 1 ரூபா 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சீனியின் வியாபார விற்பனை மொத்தவரி ஒரு வீதத்திலிருந்து ... சீனியின் வியாபார விற்பனை மொத்தவரி அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனல் சீனியின் விற்பனை விலை அதிகரிக்கப்பட மாட்டாது.

(8-ம் பக்கம் பார்க்க)

## சீனவில் கடுமையான குடும்பக் கட்டுப்பாடு

(ஷாங்காய்)

சீனவில் குடும்பக்கட்டுப்பாடு தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. 2000 மாவது ஆண்டில் சீனவின் ஜனத்தொகை வளர்ச்சியை முற்ருக நிறுத்திவிட திட்டமிடப்பட்டுள்ளது.

சீனக்குடும்பங்கள் ஒரு குழந்தைக்கு மேல் பெற்றெடுப்பதை சட்டத்தின் மூலம் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம்.

இ. போ. ச- தொழிற்சங்கப் பிரமுகர் மோசடி :

## எதிர்க்கட்சித் தலைவர் சபையில் பிரஸ்தாபம்

(கொழும்பு)

வடபகுதியில் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரமுகர் ஒருவர் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி இளைஞர்களை ஏமாற்றி பணம் சம்பாதித்ததாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் பற்றி எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினர்.

இது தொடர்பாக இருவர் சமர்ப்பித்துள்ள சத்தியக் கடதாசிகளை எதிர்க்கட்சித் தலைவர் சமர்ப்பித்தார்.

மேற்படி மோசடி தொடர்பாக 'ஈழநாடு' நாள் ஏட்டில் வெளிவந்த செய்தியொன்றையும் சபையில் திரு அமிர்தலிங்கம் வாசித்துக்காட்டி அதனை உடன் ஆங்கிலப்படுத்தியும் காட்டினர். இச்சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம)

யாழ். ஆஸ்பத்திரியில் இறந்த

## இவரைத் தெரியுமா?

(யாழ்ப்பாணம்)

தலையில் பலத்த காயங்களுடன் மயக்க நிலையில் இம்மாதம் 3-ம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டஒருவர் மயக்கம் மாருத நிலையில் நேற்றுக்காலை யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானர்.

மரணமானவர் சுமார் 40 வயது இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகின்றது.

இம்மரணம் சம்பந்தமாக யாழ். பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டரும் போக்குவரத்துப் பகுதிப் பொறுப்பதிகாரியுமான திரு. எஸ். சேனுதிராசாவிடம் தமது நிருபர் விசாரித்தபோது இம் மாதம் 3-ம் திகதி புஹாரகமவிலுள்ள நாவின்னையைச் சேர்ந்த உல்லாசப் பிரயாணிகள் பஸ் சாரதி ஒருவர் மேற்படி நபரை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் அன்றிலிருந்து மரணமாகும் வரை மரணமானவர் மயக்க நிலையிலேயே இருந்ததாவும் தெரிவித்தார்.

திரு. சேனுதிராசா மேலும் தெரிவிக்கையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமாகும்வரை மரணமானவர் சம்பந்தமாக இதுவரை பொலிசாருக்கு எதுவித அறிவித்தலையும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் அறிவிக்கவில்லை என்றும் இறந்தவரின் உற்ருர் உறவினர் நண்பர்கள் உடனடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளும் படியும் கேட்டுக்கொண்டார். (கொ)

## தென்னக நடிகர்கள் இன்று வருகிருர்கள்

### கலை நிகழ்ச்சியில் கலந்துகொள்வர்

(யாழ்ப்பாணம்)

தமிழக திரை நடிகர்கள் நாகேஷ், ஜெய்சங்கர், அசோகன் ஆகியோர் இன்று காங்கேசன் துறைக்கும், யாழ். நகருக்கும் விஜயம் செய்கின்றனர்.

விசேஷ விமானம் மூலம் வந்துசேரும் தென்னிந்திய திரைக் கலைஞர்கள்; முதலில் இன்று மாலை காங்கேசன் துறைப் பட்டினசபை விளையாட்டரங்கிலும், இதனைத் தொடர்ந்து இன்றிரவு யாழ்ப்பாணம் துரையப்பா விளை

(8-ம் பக்கம் பார்க்க)

National Palm Industries Ltd.
(UNDER FORMATION)

தேவை

சுருவிலில் (ஊர்காவற்றுறை) நிறுவப்படும் கங்குமட்டையில் இருந்து பனந்தும்பு தயாரிக்கும் தொழிற்சாலையில் பின்வரும் வெற்றிடங்கள் உண்டு. சம்பந்தப்பட்ட தொழிலில் அனுபவமுள்ளவர்களும், சுருவிலையும், அதற்கடுத்த கிராமங்களையும் வசிப்பிடமாகக் கொண்டவர்களும் விசேடமாக விரும்பத்தக்கவர்கள்.

(1) முகாமையாளர்: 40 வயதிற்கு மேற்பட்டவர்கள்.
(2) தொழிலாளர்கள்: 18 வயதிற்கு மேற்பட்டவர்கள்.

தகைமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பங்களை கீழ் காணும் முகவரிக்கு 29-2-80 முன் அனுப்பவும்.

விளம்பரதாரர்
5030 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.

# ஒஸ்மானியா மாணவர் பகிஷ்கரிப்பு, ஆர்ப்பாட்டம்

## கல்லூரிக் குறைபாடுகளைத் தீர்த்துவைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியா கல்லூரி மாணவ மாணவிகள் சுமார் 500 பேர் நேற்று வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வெளியில் நின்று அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமது பாடசாலையின் சில முக்கிய குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கோரி மேற்படி மாணவ மாணவிகள் இந்தப் பகிஷ்கரிப்பை நடத்தினர்கள்.

இதுபற்றி கேள்வியுற்ற யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. ரி.மாணிக்கவாசகர் ஸ்தலத்துக்குச் சென்று மாணவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

அதிபர் ஒருவர் எமது பாடசாலைக்கு வேண்டும் ஆசிரியர் பற்ருக்குறையைப் போக்கி தகுதியான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். என்பதையும் வேறு கோரிக்கைகளும் அடங்கிய சுலோக அட்டைகளை தாங்கிய வண்ணம் சுமார் 500 பேர்வரை பாடசாலைக்கு வெளியே வீதி ஓரத்தில் அமைதியான முறையில் நின்று வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்களை யாழ். பொலிஸ் நிலையத்தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் சந்திரா பெரேரா சந்தித்து வீதியை தடைசெய்யாது பாடசாலை வளவுக்குள் நிற்கும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க மாணவர்கள் வேறு இடத்துக்குச் சென்றனர்.

இதுபற்றி யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. வடமாநிலக்கல்விப் பணிப்பாளர் திரு. ரி. மாணிக்கவாசகர் பிரதம கல்வி அதிகாரிகள் திரு. எம். எம். மன்சூர் ஆகியோர் பாடசாலைக்குச் சென்று கடும் வெய்யிலில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த மாணவர்களைச் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர்.

மாணவர்களின் முக்கிய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட திரு. மாணிக்கவாசகர் கூடிய விரைவில் நிரந்தர

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரியிலிருந்து 500 யார் தொலைவில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவோ, தோட்டம் செய்யவோ ஏற்ற இடம். பகுதியாகவும் விற்கப்படும். தொடர்பு:— 68, சீனி வாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 5009

ஊர்காவற்றுறை - வேலணை றோட்டும், ஊர்காவற்றுறை - பண்ணை றோட்டும் சந்திக்கும் சந்தியில் ஊர்காவற்றுறை வேலணை றோட் அருகாக அமைந்திருக்கும் காணி விற்பனைக்கு உண்டு. இக்காணி உப உணவுப் பயிர்கள் செய்வதற்கும், குடியிருப்பதற்கும் கோடை காலத்திலும் வற்றாத நல்ல தண்ணீர் கிணறுமுள்ள காணியாகும். இது தொடர்பாக க. மு. தர்மராஜா, பிரசித்த நொத்தாரிஸ், 9-ம் இலக்கம், 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்க. 5029

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஸ்தாபனம் ஒன்றிற்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் கணக்கு எழுதுவதில் நன்கு தேர்ச்சியுள்ள கணக்குப்பிள்ளைதேவை. வியாபாரக்கணக்குகள் எழுதுவதில் குறைந்தது ஐந்து வருட அனுபவமும் நல்ல ஒழுக்கமும் இருத்தல் வேண்டும். சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5019 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5019

## சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்விப்பத்திரம் கோரல்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் சிற்றுண்டிச் சாலையை நடாத்துவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவு திகதி 5-3-1980. விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் ரூபா 2/-ஐப் பொருளாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் மூலம் 22-2-80-ந் திகதி தொடக்கம் அலுவலக நேரத்துள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ம. மகேந்திரராஜா
கௌரவ செயலாளர்,
கல்வித் திணைக்கள
பொழுதுபோக்குக்களரி,

19-2-19 0

5027

## நாதஸ்வர வித்துவான்களின் தமிழகவிஜயம்

(அளவெட்டி)

மதுரை பிரபல நாதஸ்வர வித்துவான் திரு. எஸ். பொன்னுச்சாமிப்பிள்ளையின் நூற்றாண்டுவிழா அழைப்பையேற்று யாழ்ப்பாணம் அளவெட்டி நாதஸ்வர வித்துவான்களான திரு. என். கே. பத்மநாதன், திரு. ஆர். கேதீஸ்வரன் ஆகியோருடன் தவில் வித்துவான்களான இணுவில் திரு. என். ஆர். சின்னராசாவும், திரு. ஆர். புண்ணியமூர்த்தியும் இந்தியாவிற்குச் சென்றுள்ளார்கள்.

முதுபெரும் நாதஸ்வர வித்துவான் மதுரை திரு. எஸ். பொன்னுச்சாமிப்பிள்ளை, தில்லானா மோகனாம்பாள் புகழ் சேதுராமன் சகோதரர்களின் தந்தை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (கு)

## முதலிலேயே ஆக்கப்ப ம் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதி மன்றத்தில்

மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்தியகலாநிதி செல்லப்பா மூத்தப்பா வன்னிய சேகரம் என்பவரது மரண சாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மல்லாகத்தைச் சேர்ந்த செல்லப்பா மூத்தப்பா வன்னியசேகரம் கைம் பெண் ஈஸ்வரி

மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. 57

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1980 ம் ஆண்டு தை மாதம் 30 ஆந்நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பதியப்பட்டதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக்கட்டளைப்படி

மூ. நல்லலிங்கம்
பதிவாளர்

1980-ம் ஆண்டு தை மாதம் 30-ஆந் நாளன்று திகதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது:

செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி

5014

## 'அரசினர் பாடசாலை என்று அசிரத்தை காட்டாதீர்கள்'

(யாழ்ப்பாணம்)

"ஒரு கிராமத்திலுள்ள ஆலய பரிபாலனத்தில் எவ்வாறு அக்கறை காட்டுவீர்களோ, அதேபோல் வித்தியாலய வளர்ச்சியிலும் பெற்றோர்கள் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும். அரசினர் பாடசாலை என்று அசிரத்தைகாட்டாது, எங்கள் வித்தியாலயம் என்ற எண்ணத்துடன் ஒன்றுபட்டு, வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும். உங்கள் பிள்ளைகளின் புத்தகப்படிப்பில் மட்டும் நீங்கள் கவனம் செலுத்தாமல் அவர்களது உடல், உளம், ஆன்மா, ஒழுக்கம், பண்பாடு, செயற்றிறன் முதலிய பல்வேறு விடயங்களிலும் படிப்படியாக எவ்வாறு முன்னேறுகின்றார்கள் என்பதையும் அவதானிக்க வேண்டும். ஒருமாதத்திற்கு ஒருமுறையாகுதல் வகுப்பாசிரியர்களை பெற்றோர் சந்தித்து கலந்துரையாடவேண்டும்"

இவ்வாறு கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் பெற்றோர்கள், நலம்விரும்பிகளைக் கொண்ட விசேட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் செயலாளர் திரு. எஸ். இராசரத்தினம், உபதலைவர் திரு. தம்புகந்தையா ஆகியோரும் திரு. சு. அடைக்கலம் ஆகியோரும் உரையாற்றினர் மாறுதலாகிச் சென்ற அதிபர் திரு. இரா. செல்வராசாவுக்கு சேவைநலம் பாராட்டு விழா நடாத்துவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கு 6-3-80-ம் திகதி முற்பகல் 11-00 மணிவரை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. நவீன சந்தை இரண்டாம் கட்டிடத்துக்கான இரும்புக் கதவுகள்.
2. புதிய வாடி வீட்டுக்கான எல்லைச் சுவர்.
3. நரிக்குண்டு கிணற்று மிகுதி வேலை.

கேள்விப்பத்திரங்கள் யாழ். மாநகராட்சி மன்றத்துடனோ அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களுடனோ ரூபா 50,000/-க்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஒவ்வொரு கேள்விக்கும் வைப்புப் பணமாக ரூ. 100/-ம், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக்கட்டணமாக ரூ.25/-ம் செலுத்தியதன் பேரில் 5-3-80 நண்பகல் 11-00 மணிவரை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய. படிவங்கள் மீது கேள்விகள் இருபிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்,
ஆணையாளர்.

வேலைப்பகுதி,
மாநகராட்சிமன்றம்,
யாழ்ப்பாணம்.
20-2-80, 5028

## மத்தியஸ்தர் சங்கம்

(அரியாலை)

யாழ்ப்பாணம் கிரிக்கட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் புதிய வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சிங்கராஜர், உப தலைவர்கள் கே. மார்க்கண்டன், டி. ஆர் அருமைநாயகன், ஆர். கனகலிங்கம், ஈ. சி. கே. இலங்காஜி, கே. யதுகுலசிங், செயலாளர் கே. எஸ். ஈ. சேவியர், உபசெயலாளர் எம். டி. தம்பிராஜா நிர்வாகசபை உறுப்பினர்கள் வி. பாலசிங்கம், சி. இரத்தினசிங்கம், கே. இராமநாதன், பி. இமானுவல், நி. செல்வராசா கணக்காளர் பி. மகேந்திரன். (இ)

## "கடவுள் நம்பிக்கை இல்லையேல் முன்னேற முடியாது"

(அரியாலை)

"தியாகம், தர்மம், வழிபாடு என்ற மூன்று வழிகளையும் நாம் கடைப்பிடிக்கவேண்டும். மற்றவனுக்குக்கொடுத்து தன்னை வாழவைப்பதுதான் தர்மம். அதனையே நாம் பின்பற்றிவாழவேண்டும். கடவுள் நம்பிக்கை இல்லையேல் எவ்வித திறமைகள் இருந்தும் எவரும் முன்னேறமுடியாது".

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரியின் இந்து மன்றத்தின் ஆதரவில் பூற்றோ ஞாபக மண்டபத்தில் "சிவராத்திரியின் மகிமை" என்ற விடயம் குறித்து சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "சிவராத்திரி விரதம் மனிதனை வருடத்துக்கு ஒருமுறை தூய்மைப்படுத்துகிறது. பல நாட்களாக லௌகீக வாழ்க்கையில் மூழ்கியிருந்தநாம் ஒருநாள் இரவும் பகலும் இறைவன் பால் மூழ்கியிருக்கவழி செய்கிறது. ஈஸ்வரன் எல்லோரிடத்திலும் உள்ளான், ஆனால் ஈசனுடன் எல்லோரும் இல்லை என்ற இராமகிருஷ்ண பரமாத்மா அருளுரைத்துள்ளார். நாம் அப்படி வாழாமல் இறையன்பு கொண்டவர்களாக வாழவேண்டும்" என்றார். (சு)

"பயிர்ச்செய்கை உத்தியோகத்தருக்கு

## சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்குத் தருக!"

(புலோலி)

"தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்றும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்குச் சிங்கள மொழித்தேர்ச்சி அவசியம் இல்லாத காரணத்தினால் இவர்களுக்கு சிங்கள மொழித் தேர்ச்சியிலிருந்து விதி விலக்களிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்".

இவ்வாறு பிரதேச அபிவிருத்தி இந்துகலாச்சார தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. செ. இராசதுரையைக் கோருவதென வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ்ப் பகுதிப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் தொழிற்சங்கத் தலைவர் திரு. பூ. நடேசானந்தம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது திருமலை, மன்னார் ஆகிய இடங்களிலும் மாவட்டக் கிளைகளை அமைப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்தீர்மானிக்கப்பட்டது. (கு)

## வீடமைப்புத்திட்டம்

(மட்டக்களப்பு)

கல்குடாத் தொகுதியில் சேனைக் குடியிருப்பு என்னும் கிராமத்தில் தேசிய வீடமைப்பு இலாகாவினால் 85வீடுகள் கொண்ட சுயவீடமைப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. இத் திட்டத்திற்கான அத்திபாரக் கல்லை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் நாட்டி வைத்தார்.

## VACANCIES FOR POSTS

IN WELL ESTABLISHED REPUTED LIMITED LIABILITY COMPANY IN JAFFNA.

**ACCOUNTANT**

Fully or partly qualified Accountant with at least three years experience in a leading firm or an experienced person who had been in charge of the Accounts Branch of Limited Liability Company for at least five years to be in charge of our Accounts Branch Age between 30 and 50 years. Salary negotiable, according to qualifications and experience.

**STORE KEEPER**

A smart man with at least two years experience as a Store Keeper in Charge in an Industry. Age above 30 years. Salary according to experience.

**CASHIER**

A trustworthy well recommended person of either sex with knowledge of Accounts. Cash security Rs. 5000/-. Age over 25 years.

ALL APPLICANTS :- Apply in own handwriting with full details of qualifications and experience and with copies of Certificates. Canvassing will be disqualification.

Apply to :-
Advt. No. 5026, C/o EELANADU, JAFFNA.

5026

மலிவு விலையில் இப்பொழுது விற்பனையாகின்றன !

* ஆடம்பரமான * மனதுக்கினிய * கண்கவர் வர்ணங்களில்

* காற் சட்டைகள் --- Trousers
* மிடிஸ்கேட்ஸ் --- Midi Skirts
* இறக்குமதியான துணி வகைகள்

குறிப்பிட்ட அளவே உள்ளன; முந்திக்கொள்ளுங்கள் !

# த பினுன்ஸ் கம்பனி லிமிட்.

249/C மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழாராய்ச்சி உலகில் ஒளிபரப்பியவர் வானமாமலை"

## அஞ்சலிக் கூட்டத்தில் உபவேந்தர் 'வித்தி'

### மணிவாக்கு

நிர்வாகத்தின் அதிகாரம் மனிதனுற் பொறுக்கமுடியாத அளவுக்குத் தீதாகும்போது ஒருமனிதன் தனதுசுதந்திரத்தையேனும் தியாகஞ் செய்து அகிம்சையுடன் கூடிய எதிர்ப்பைச் சாதிக்கிருன்.

— மகாத்மர்காந்தி.

### மக்கள் கருத்து

## சமூக நலன் விரும்பிகள் கவனிப்பார்களா?

வல்வெட்டித்துறை கம்பர் மலையைச் சேர்த்த சுந்தரவதனு ஓர் ஏழைப்பெண். வயது 32. ஐந்து குழந்தைகளுக்குத் தாய். ஏழுமாதங்களுக்கு முன்னர் தன்கணவனை இழந்து விதவையானவர். மூத்த இரண்டு பிள்ளைகளும் (ஆண்கள்) தேகாரோக்கியத்தில் குறைபாடில்லாதவர்கள். அடுத்த மூன்று குழந்தைகளும் படுத்தபடுக்கையாகக் கிடக்கும் வலது குறைந்த குழந்தைகள். இவர்களில் மூத்தது ஆண். 8, 5, 2 வயதுடைய இம்மூன்று குழந்தைகளுக்கும் வைத்திய சிகிச்சையளித்து வாழ்வளிக்க வைத்திய நிபுணர்களாலும் முடியாதுபோய் விட்டது.

ஏழ்மையின் பாதாளப்படுகுழியில் கிடந்து உழலும் இந்த அபலைத்தாய்க்கும், இவரின் முடமாகிவிட்ட குழந்தைகளுக்கும் ஏதாவது உதவி கிடைக்கலாம் என்ற நம்பிக்கையோடு நான் பல சமூக (நலன்விரும்பிச் செயல்படும்) ஸ்தாபனங்களுக்கும், அரசாங்க சமூக சேவைப் பகுதியினருக்கும் சர்வதேச சிறுவர் ஆண்டான 79ம் ஆண்டு பலதடவை விண்ணப்பக்கடிதங்களை அனுப்பிவைத்தேன். வேருெரு பலனும் இந்தக் குடும்பத்துக்குக் கிடைக்கவில்லை. அரசாங்க சமூக சேவைப் பகுதி மட்டும் மாதாந்தம் 25 ரூபா உதவி வருகிறது.

வாழ்க்கைச் செலவினங்களின் பளுவைச் சுமக்கமுடியாது உழைப்பாளிகளைக் கொண்ட குடும்பங்களே இப்போது அல்லற்படும்போது இந்த அபலைத்தாய் என்ன செய்வாள். இத்துயர் நிறைந்த குடும்பத்துக்குவிடிவேவராதா? சமூக நலன்விரும்பிகளும் ஸ்தாபனங்களும் சிந்திக்கவேண்டுகிறேன்.

கே தங்கவடிவேல்,
(ஆசிரியன்)

## மணிக்கூட்டுக் கோபுரமணி திருத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரத்தின் மத்தியில் உயர்ந்துநிற்கும் மணிக்கூட்டுக் கோபுரத்தில் புதிய எலெக்ரூேனிக் ஒலி அமைப்புடன்கூடிய நவீன மணிக்கூடு பொருத்தப்படவுள்ளது.

பல்தரப்பட்ட மக்களாலும் அடிக்கடிசெய்யப்பட்டமுறைப்பாட்டை அடுத்து, நீண்டகாலமாகப் பழுதடைந்திருந்த மணிக்கூட்டுக்கோபுர மணியைத் திருத்துவதற்கு மாநகர சபை தற்போது நடிவடிக்கை எடுத்துள்ளது. மேற்படிதிருத்த வேலைகளை மேற்கொள்ளுவதற்கான கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. அதற்கு முன்னேற்பாடாக கோபுரத்தைச் சூழச் சாரம் கட்டப்பட்டுவருகிறது. (கு)

(யாழ்ப்பாணம்)

"தமிழாராய்ச்சி உலகிலே ஒளிபரப்பிவந்த பேராசிரியர் வானமாமலையின் மறைவு எம்மைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. எதிர்வரும் மார்ச் மாதம் இங்குவருவதாக இருந்தார். அவரோடு நேரில் பேசி அளவளாவும் வாய்ப்பு எமது மாணவர் சமூகத்திற்கு இல்லாமல் போய்விட்டது. நாட்டாரியல், வரலாற்றியல், மெய்யியல், இலக்கிய ஆய்வு ஆகிய துறைகளிலே புதிய சிந்தனைகளைத் தாங்கிய கட்டுரைகளை வெளியிட்டு அந்த இவர் இலங்கையில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை உருவாக்கிய ஆராய்ச்சிப் பாரம்பரியத்தை புதிய துறைகளை முதன்மைப்படுத்தும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்".

மேற்கண்டவாறு யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினரால் நடாத்தப்பட்டபேராசிரியர் வானமாமலை அஞ்சலிக் கூட்டத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேசுகையில் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் "எமக்கு நாட்டுப் பண்பாட்டியலில் நிரம்பிய ஆர்வமிருந்தமையால் வானமாமலையின் எழுத்துக்கள் புதிய நம்பிக்கையைத் தருவனவாகஅமைந்தன. 1960ம் ஆண்டு இவர் வெளியிட்ட "தமிழ்நாட்டுப் பாமரர்பாடல்கள்" என்றநூல் எம்மைப் பெரிதும்கவர்ந்தது" என்றுர்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் க. கைலாசபதி பேசுகையில், "தமிழ்த்திறனுய்வுக்கும் கல்விக்கும் ஒருமுக்கியபணியை பேராசிரியர் வையாபுரிப் பிள்ளைக்குப்பின் ஒரு வைரம் பாய்ந்த முயற்சியாக பேராசிரியர் வானமாமலை செய்த பணி முக்கியமானது. சமூக விஞ்ஞானம், மானிடவியல், தத்துவம், உளவியல்ஆகியவற்றைத்தமிழ்இலக்கியத்திறனுய்வில் புகுத்தியவர் வானமாமலையவர்களே, மிகப்பழைய இலக்கியங்களிலிருந்து மிப் புதிய இலக்கியங்கள் வரை தமது ஆராய்ச்சியை மேற்கொண்டார். இலக்கியத்துக்கும் வாழ்க்கைக்கும் ஒருபுதிய இணைப்பை ஏற்படுத்தியவர் பேராசிரியர் வானமாமலை" என்றுர்.

கலாநிதி அ. சண்முகதாஸ் பேசுகையில் கூறியதாவது:

"முதலாவது உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டில் சிலப்பதிகாரத்தில் எப்பகுதிகளிலே நாட்டுப்பண்பாட்டியற் கருப்பொருள் இடம்பெற்றிருக்கின்றதென்பதைத் தெளிவாகவும், விரைவாகவும் தமது ஆராய்ச்சிக் கட்டுரையிலே விளக்கியுள்ளார்.

"பல அறிஞர்கள் நாட்டுப் பண்பாட்டியல் துறையிலே பேணத்தக்கினை அளித்தவர்ளெனக் கூறலாம். ஆனுல் பேராசிரியர் வானமாமலை இத்துறையிலே ஆய்வுப்பங்கினை வழங்கியுள்ளாரென்று கூறலாம்:".

தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி பேசுகையில், "பேராசிரியரின் நாட்டாரியல் முக்கியத்துவத்தைத் தமிழகம் ஓரளவு அங்கீகரித்துள்ளது. ஆனுல் அந்த நாட்டாரியலை எதற்குப் பயன்படுத்த விரும்பினுரோ அந்த முக்கியஅம்சத்தைப்பொறுத்த வரையில் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த முக்கிய துறையில் இலங்கை ஆராய்ச்சியாளர்கள் பிரக்ஞைபூர்வமாக ஈடுபட்டிருந்தமையால் அவர்எமமை நன் அறிந்திருந்தார்" என்று குறிப்பிட்டார். (கொ-கு)

## பாடசாலை விடுமுறை

(மட்டக்களப்பு)

இவ்வருட அரசாங்கப் பாடசாலைகள் தவணை விபரம் வருமாறு:

**தமிழ்- சிங்கள பாடசாலைகள்**

ஜன. 16 முதல் ஏப்ரல் 3வரை (இரு தினங்கள் உட்பட)
மே. 5 முதல் ஆகஸ்ட் 8வரை (இரு தினங்கள் உட்பட)
ஆகஸ்ட் 26 முதல் டிசம்பர் 5வரை(இரு தினங்கள்உட்பட)

**முஸ்லிம் பாடசாலைகள்**

ஜன.16 முதல் டிசம்பர் 5வரை (இருதினங்கள் உட்பட)
ஏப்ரல் 21 முதல் ஜூலை 7வரை (இருதினங்கள் உட்பட)
ஆகஸ்ட்28 முதல் டிசம்பர்11வரை (இருதினங்கள்உட்பட)

இதற்கான சுற்று நிருபம் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. டி. பி. தசநாயகாவினுல் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## தவக்கால நற்சிந்தனை



### நீங்கள் என்னைத் தேடுவீர்கள்

(அரு. 13/33)

தான்பிரிந்து செல்லப்போவதாக யேசு தன் சீடர்களிடம் கூறியிட்டார். இன்னும் காஞ்சநாட்களில் அவரும் ... அறிவரையும், ஆதர ... ல் லாதிருப்பார்கள். சீடர்கள் கலக்கமடைகிருர்கள் யேசுவின் பிரிவை எண்ணி அஞ்சுகிருர்கள்.

அன்புமிகு ஆண்டவரே, சிலவேளைகளில்நான் இழிவடையவன் என்பதை உணருகிறேன். நீர் என்னைவிட்டு அகன்றிருக்கிறீர். சோதனைகள் என்னைத் தாக்குகின்றன. என்நண்பர்கள் என்னைக் கைவிட்டுவிடுகின்றனர். நிகழ்காலம் இருள்படர்ந்ததாகத் தோன்றுகின்றது. ஆண்டவரே நீர் எங்கே இருக்கிறீர்.

பாவம், தீய நாட்டம், சோம்பல், ஆன்மீக வறட்சி, அலட்சிய மனப்பான்மை முதலியவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. நான் ஆறுதலற்றவனுய், பயனற்றவனுய் குறிக்கோளற்றவனுய் நடைப்பிணமாக நிற்கின்றேன். ஆண்டவரே நீர் எங்கே இருக்கிறீர்? என்மீது இரக்கம்வையும். ஆண்டவரே விரைவாக வாரும்.

-வண மேரிபஸ்ரியன் அடிகள்

## "சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியின் அவலநிலை; பல குறைபாடுகள்!"

(சங்கானை)

"வட்டுக்கோட்டை, மானிப்பாய், காங்கேசன்துறை ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் சேவையாற்றிவரும் சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியின் நிலை மிக மோசமாகவுள்ளது இங்கு பல வேளைகளில் நோய்க்கேற்ற மருந்தோ, ஊசிகளோ மருந்து கட்டும் 'பன்டேஜ்' களோ, ஸ்பிறிற் ஆகியவைகளோ இல்லை இங்கு செல்லும் நோயாளர் இவற்றை வெளியிலிருந்து எடுத்துவரும்படி பணிக்கப்படுகின்றனர். இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்."

இவ்வாறு சமாதான நீதவான் திரு. இ. நடேசன் கண்டனம் தெரிவித்தார். சங்கானை இந்து இளைஞர் மன்ற ஆதரவில் கண்ணன் சிறுவர் பாடசாலையில் சங்கானை பட்டினத்தின் குறைபாடுகள் பற்றி ஆராயப்பட்ட கூட்டத்திலேயே மேற்கண்டவாறு திரு நடேசன் கூறினுர்.

சங்கத்தலைவர் திரு. மு.நேசரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. நடேசன் தொடர்ந்து கூறியதாவது:- "இங்குள்ள பிரசவவார்ட்டில், கர்ப்பவதிகளும், பிரசவித்தோரும் சிசுக்களுடன் வெய்யிலிலாலும்குளிராலும்தாக்கப்படுகின்றனர். வைத்திய அதிகாரியின் விடுதி இன்னும்அமைக்கப்படவில்லை. பயிற்றப்பட்ட தாதி இல்லாத காரணத்தால் ஊசி போடுவதற்கு சில வேளைகளில் சிற்றூழியர் பணிக்கப்படுகின்றனர். ஆஸ்பத்திரியைச் சுற்றி உள்ள வேலிகள் பாதுகாப்பின்மையால் கட்டாக்காலி நாய்கள்மாடுகள்வார்ட்டுகளில் நடமாடுகின்றன". என்று கூறினுர்.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வட்டுக்கோட்டை எம். பி திரு. தா. திருநாவுக்கரசு ஆஸ்பத்திரி குறைபாடுகள் வடலியடைப்பு சங்கானை வீதி மற்றும் பஸ் சேவை ஆகியவை தீர்த்து வைக்கக் கூடியனவென்றும், வீதியை பகுதி பகுதியாகவே செப்பனிட முடியும் எனவும் வாக்குறுதியளித்தார்.

கண் வைத்திய சிகிச்சைப் பிரிவை வாரத்தில் ஒருமுறையாவது இயங்க வைக்க வேண்டும் என்று விடுத்த வேண்டுகோளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் அதை நிறைவேற்றி வைப்பதாகத் தெரிவித்தார்.

பலர் உரையாற்றிய பின் இந்து இளைஞர் மன்றக் காரியதரிசி எஸ். சாம்பசிவம் நன்றி உரை கூறினுர்.

பஸ்சேவை அபிவிருத்தி:

## "பிரயாணிகள் சங்கங்களுக்கு பெரும் பங்குண்டு" -- டட்லி குணசேகரா

(புலோலி)

"மக்களுக்குச் சிறந்த போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்கு பிரயாணிகள் சங்கங்கள் போதிய ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்சேவையைச் சிறப்பாக மேற்கொள்வதில் பிரயாணிகள் சங்கங்களுக்கு பெரும் பங்குண்டென்பதை உணர்ந்து பிரயாணிகள் சங்கப்பிரதிநிதிகள் சிறப்பாக இயங்குவது முக்கியமாகின்றது".

இவ்வாறு வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. டட்லி குணசேகரா வடபிரதேசத்தில் உள்ள பிரயாணிகள் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக்கூட்டத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச்சபையின்சாலை அத்தியட்சகர்களும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் திரு. டட்லி குணசேகரா மேலும் குறிப்பிட்டதாவது:

"பஸ் ஊழியர்கள் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியிலேயே சேவையாற்றி வருகின்றனர். எனவே பஸ் ஊழியர்களுடன் பிரயாணிகள் அன்பாகவும் பண்பாகவும் பழக வேண்டும். அப்போதுதான் ஊழியர்களுக்கும் பிரயாணிகளுக்குள்ளும் நல்லுறவு ஏற்பட்டு சிறந்த பஸ் சேவையை ஏற்படுத்தமுடியும்.

"பிரயாணிகள் சங்கப் பிரதிநிதிகள் போக்குவரத்துச் சேவைகளில் குறைகண்டு பிடிப்பதை மாத்திரம் நோக்கமாகக் கொண்டிராமல் உள்ள குறைபாடுகளை நீக்க ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

"பஸ்சேவைகளைச் சீர் செய்து பிரயாணிகளுக்குச் சிறப்பான பஸ் சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கை இலங்கைப் போக்குவரத்துச் சபை மேற்கொண்டு வருகின்ற போதிலும் பஸ் வண்டிகளின் பற்றாக்குறை, உதிரிப்பாகங்களின் தட்டுப்பாடுபோன்ற சில இடைஞ்சல்களைவிளைவிக்கின்றன. இந்த இடைஞ்சல்களை நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று கூறினுர்.

## பட்டமளிப்பு விழா

(கொழும்பு)

களனிப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பொதுப்பட்டமளிப்பு விழா இம்மாதம் 23-ந் திகதி நடைபெறவுள்ளது.

பத்துவருடங்களுக்கு முன்னர் பட்டம்பெற்ற பட்டதாரிகளுக்கு இவ்விழாவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். (நா)

## காசி, மாவைக்கு மட்டுநகரில் வரவேற்பு

(மட்டக்களப்பு)

அண்மையில் இல்லற வாழ்வில் நுழைந்த தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்பாளர்களான காசியானந்தன், மாவை சேனுதிராஜா தம்பதிகளுக்கு மட்டக்களப்பில் திருமண வரவேற்பு விழா நடத்துவதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

காசி ஆனந்தனுக்கு ஏற்கனவே வரவேற்பு அளிக்கப்படவிருந்ததாகவும் அவசரகால சட்டம், அமுல் செய்யப்பட்டமை தொடர்ந்து ஏற்பட்ட சூழ்நிலையால் அவ்வரவேற்பு நடாத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிதறுண்ட ஜனதா மீண்டும் இணைகிறது?

# லோக்தள் - ஜனதா இணைப்பு: பேச்சு நடக்கிறது என்கிறார் சரண்சிங்

புதுடில்லி, பெப். 21 கலைக்கப்பட்ட சட்டசபைகளின் தேர்தலுக்காக எதிர்க் கட்சிகளைக் கொண்ட ஐக்கிய முன்னணி அமைக்கும் சாத்தியம் இல்லை.

எனினும் ஜனதா கட்சியையும் லோக்தள்ளையும் இணைப்பதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு லோக்தள் தலை திரு. சரண்சிங் கூறியுள்ளார்.

லோக்தள்ளுடன் ஜனதாக் கட்சியில் உள்ள ஜனநாயக சக்திகள் இணைந்து ஒரு ஐக்கிய கட்சி உருவாக வேண்டும். இக்கட்சி பழைய கட்சிபோல் இருக்கக் கூடாது என்றும் திரு. சரண்சிங் கூறினார்.

கட்சி இணைப்புக் குறித்து ஆராய லோக்தள்ளின் தேசிய நிர்வாகக் கமிட்டி சனியன்று கூடுகிறது என்றும் அவர் கூறினார். (இ)



## தொழிலாளர் நண்பன் வடிவேல்முருகன்

அமரர் வடிவேல்முருகன் தாம் பிறந்த காரைநகர் தோப்புக்காடு கிராமத்திற்கே சிறப்பளித்தவர். இவர் காலஞ் சென்ற வைத்திலிங்கம் தம்பிப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது புதல்வராவர்.

சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்த இவர் முதலில் தமது சேவையை மடுல்கலைப்பகுதியிலுள்ள நெல்லிமலைத் தோட்டத்தில் ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து கொழும்பு முகத்துவாரம் தமிழ்க்கலவன் பாடசாலை, தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலை, தங்கோடை அமெரிக்கன்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, காரைநகர் யாழ். நகர் கலாசாலை, வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் பணியாற்றினார்.

கொழும்பு தோப்புக்காடு இந்து வாலிபர் சங்கம், ஆலய சேவா சங்கம், கிராம முன்னேற்றச்சங்கம், முருகன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிலும் முக்கியஸ்தராக விளங்கிய இவர் யாழ். மாவட்டத் துறைமுகக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் துணைத்தலைவராகவும் இருந்து கிராமமக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தோப்புக்காடு, ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு துறைமுகத் தொழிலாளர்களின் உயர்வு கருதி தோப்புக்காடு முருகன்வத்தைப் பொது வேலைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து தாம் இறக்கும் வரை தலைமைப் பதவியை அலங்கரித்தவர்.

இவர் கிராமத்துக்கு ஆற்றிய சேவைகளில் முருகன் திறந்தவெளி அரங்கும், தோப்புக்காடு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலின் திருப்பணி வேலைகளும் என்றும் உரைகல்லாய் இருக்குமென்பது திண்ணம்.

-தோப்பூரான்

### ஜனதாவிலிருந்து விலகுவதானால்

## கற்பனைக்காரணங்கள் கூறத்தேவையில்லை

### அத்வாணி கருத்து

புதுடில்லி, பெப். 21 ஜனதா கட்சியிலிருந்து திரு. ஜெகஜீவன்ராம் விலக விரும்பினால் விலகட்டும்.

ஆனால் கட்சியிலிருந்து விலக விரும்புபவர்கள் தாம் விலகுவதற்கு கற்பனைக்காரணங்கள் எதுவும் கூறவேண்டியதில்லை.

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. எல். கே. அத்வாணி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் ஜனதாவும் லோக்தளும் இணைந்து போட்டியிடவேண்டும் என்று எழுந்துள்ள கோரிக்கையை அடுத்து கட்சிக்குள் தோன்றியுள்ள கருத்துவேறுபாடுகளை அடுத்தே திரு. அத்வாணி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

### இன்றைய நெருக்கடியில்

## ஜனதாவைவிட்டு எவர் விலகுவதையும் விரும்பவில்லை

### சந்திரசேகர் கூறுகிறார்

புதுடில்லி, பெப். 21 நெருக்கடியான இன்றைய காலகட்டத்தில் எவருமே ஜனதா கட்சியிலிருந்து விலகுவதை நாம் விரும்பவில்லை.

இவ்வாறு ஜனதாக் கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஜனதாவிலிருந்து வெளியேற விரும்புபவர்களை நாம் எவ்வாறு தடுக்கமுடியும்? அவர்களுக்கு வருத்தத்துடன் விடைகொடுப்போம் என்றும் திரு. சந்திரசேகர் கூறினார். (இ)

### தி. மு. க. - இ. காங்கிரஸ் கூட்டணி:

# தமிழக சட்டசபை தேர்தலிலும் நீடிக்கும்

### சென்னையில் மத்தியமந்திரியும் உறுதி

சென்னை, பெப். 21 எதிர்வரும் சட்டசபைத் தேர்தலிலும் தி. மு. க. — இந்திரா காங்கிரஸ் கூட்டணி நீடிக்கும்.

அ. தி. மு. கவுடன் இந்திரா காங்கிரஸ் எதுவித தொடர்பும் வைத்திருக்காது.

ஹிந்திமொழி பேசாதமக்கள் மீது அரசு எக்காரணம் கொண்டும் ஹிந்தியைத்திணிக்காது' இவ்வாறு இந்திய பெற்றோலிய மந்திரி திரு. பி. ஸி. சேத்தி சென்னையில் தெரிவித்தார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் தலைமையை ஏற்றுக் கொண்டதன் மூலம் தமிழக மக்கள் தேசிய வாழ்வில் சேர்ந்துகொண்டமை மகிழ்ச்சிக்குரியது என்றும் திரு.சேத்தி கூறினார். (இ)

| தேசாயின் மகன் | சரண்சிங்கின் மனைவி |
| --- | --- |

## வழக்குகளை விசேடநீதிமன்றம் முன் தாக்கல் செய்யாது

புதுடில்லி, பெப். 21 முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயின் மகன் காந்திலால் தேசாய், காபந்து பிரதமர் திரு. சரண்சிங்கின் மனைவி திருமதி காயத்திரி தேவி ஆகியோருக்கு எதிரான அதிகார துஷ்பிரயோகம், ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்குகளை விசேட நீதிமன்றத்தில் தாக்கல்செய்ய அரசு விரும்பவில்லை.

இவ்வாறு இந்திய சட்ட மந்திரி திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

காந்திலால்தேசாய், திருமதி காயத்திரிதேவி ஆகியோர் மீதான வழக்குகளை விசேட நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யுமாறு பலர் தற்போது அரசை வற்புறுத்திவருகின்றனர். எனினும் அரசு அவ்வாறு செய்யாது என்றும் அவர் கூறினார்.

உள்நீதிமன்றம், மற்றும் நீதிமன்றம் முன்னுள்ள இது போன்ற வழக்குகளை விசாரணை செய்து முடிக்கும்வரை விசேடநீதிமன்ற சட்டத்தை அரசு ரத்துச்செய்யாது என்றும் திரு. சிவசங்கர் தெரிவித்தார். (இ)

| இந்திராவுடன் சேர்வதா? | புதிய கட்சி அமைப்பதா? |
| --- | --- |

# ஜெகஜீவன் முடிவு சனியன்று தெரியும்

புதுடில்லி, பெப். 12 கடந்த லோகசபைத் தேர்தலில் ஜனதா கட்சி தோல்வியுற்றதற்குக் காரணம் நானும் எனது ஆதரவாளர்களுமே என்று கட்சிக்குள்ளேயே குற்றம்சாட்டப்படும்போது தொடர்ந்து கட்சியிலிருப்பது பொருத்தமற்றது.

இவ்வாறு திரு. ஜெகஜீவன்ராம் கூறியுள்ளார்.

தமது எதிர்காலம் குறித்து எதிர்வரும் சனிக்கிழமை தாது ஆதரவாளர்களுடன் கலந்தாலோசித்தபின்னரே முடிவுசெய்யப்போவதாகவும் திரு. ஜெகஜீவன்ராம் கூறினார்.

இதேவேளையில் திரு. ஜெகஜீவன்ராம் ஜனதா கட்சியிலிருந்து வெளியேறி இந்திராகாங்கிரசில் சேருவார் என ஒரு செய்தியும் புதிய கட்சி ஒன்றை அமைக்கலாம் என வேறுசில செய்திகளும் தெரிவிக்கின்றன. (இ)

### இந்தியாவுக்கு எதிரான ஆயுத விநியோகம்:

## எதுவித பலனும் அளிக்காது

### வெளியுறவு அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி, பெப். 21 இந்தியாவுக்கு எதிராக எந்த ஒரு நாட்டுக்கும் ஆயுத விநியோகம் செய்வதால் எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக கடந்தகாலத்தில் வேறு நாடுகள் இந்திய அண்டை நாடுகளுக்கு ஆயுதங்களை விநியோகம்செய்ததால் ஆயுதங்கள் விரயமாகியதே ஒழிய எதுவித பலனும் எந்த நாட்டுக்கும் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் உருவாகும் எந்தத் தகராறும் தொடர் விளைவுகளை ஏற்படுத்தி இந்தியவுக்கு அபாயம் விளைவிக்கும் என்பதால் பிராந்திய அமைதிக்கு இந்தியா முக்கியத்துவம் அளிக்கிறது என்றும் அவர் கூறினார். (இ)

### போலி அத்தாட்சியுடன் 3 மாத காலம்

## கடமையாற்றிய நடத்துநர் பணமோசடியில் கைது!

(யாழ்ப்பாணம்) போலி அத்தாட்சி மூலம் வடபிரந்திய போக்குவரத்து சபையில், நடத்துனராகப்பதவி வகித்த ஒருவர். டிக்கட் பண மோசடியொன்றில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் டிப்போவிலிருந்து இடமாற்றம்பெற்று வந்ததாக கூறி கோண்டவில் டிப்போவில் கடமையை ஏற்ற [illegible] மாதகாலம் [illegible] கடமையாற்றியதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த 3 மாத காலத்தில் இவர் டிக்கட் விநியோகத்தில் 795 ரூபா 50 சதம் மோசடி செய்ததாக கண்டுபிடிக்கப்பட்டதைதொடர்ந்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

யாழ். பொலிஸ் விசேட குற்றதடுப்பு புலனாய்வு பகுதியை சேர்ந்த சார்ஜன் எஸ். பிள்ளை கான்ஸ்டபிள் வி. இராமலிங்கம் ஆகியோர் நெடுங்கேணிக்குச் சென்று மாமடு என்ற இடத்தில் வைத்து இவரைக்கைதுசெய்தனர்.

இவரைப் பொலிஸார் விசாரணை செய்தபோது, இவர் போலி அத்தாட்சி பத்திரம் மூலம் வேலை பெற்றதாகத் தெரியவந்தது.

யாழ். நீதவான் ஆர். இராசசிங்கம் முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 28-ம் தேதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டார். (கொ-கு)

## உபதலைவராக இலங்கையர்

(யாழ்ப்பாணம்) இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைவர் திரு. செந்தில் அரசரத்தினம்மலேஷியாவில் நடைபெற்ற இந்து இளைஞர் மகாநாட்டில், உலக இந்து இளைஞர் மன்றம் என்று புதிதாக அமைக்கப்பட்ட அமைப்பின் உபதலைவராகஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

நல்லூரர் இந்து இளைஞர் மன்றத்தின் செயலாளரான இவர் அரஸ்கோ உரிமையாளர் திரு. அரசரத்தினத்தின் கனிஷ்ட புதல்வர். யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். (கொ)

# லோக்தள்ளுடன் ஜனதா இணையாது

### அத்வாணி கூறுகிறார்

புதுடில்லி, பெப். 21 ஜனதா கட்சிக்கு லோக்தள்ளுடன் இணைந்துகொள்ளும் யோசனை எதுவும் கிடையாது.

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு எல். கே. அத்வாணி தெரிவித்துள்ளார்.

ஜனதா கட்சியிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்ள வேண்டும்என்ற கொள்கையை முற்றாக எதிர்ப்பதாகவும் அவர் கூறினார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அமலமரித்தியாகிகள் முதல்வரின் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

அமல மனுத்தியாகிகள் முதல்வர் அதி. வண. பேர்ணண்ட் ஜெமறே இம் மாதம் 25-ம் திகதி யாழ்ப்பாணம் வருகிருர்.

ஐம்பத்துநான்கு நாடுகளில் பணிபுரியும் 6153 அமல மரித்தியாகிகளின் முதல்வரான அடிகளார் இம்மாதம் 24ம் திகதி கட்டுநாயக்கா விமான நிலயத்தை வந்தடைவார். மறு நாள் யாழ். நகர் வரும் இவர் 26ம் திகதி யாழ். அ. ம. தி. களோடு கலந்துரையாடுவார். பிற்பகல் யாழ். ஆயா அதி. வண. பி. தியோகுபிள்ளையைச் சந்திப்பார். அன்று மாலை 5.45 மணிக்கு யாழ். ஆசனக் கோவிலில் நடைபெறும் கூட்டுத் திருப்பலியிலும் பங்குபற்றுவார்.

மொன்றியல் நாட்டைச் சேர்ந்த அடிகளார் 1947ம் ஆண்டு குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். விரிவுரையாளராகவும், உதவி அதிபராகவும் இருந்த இவர், 1974ம் ஆண்டு அ. ம. தி. துறவற சபையின் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (கு)

(மட்டக்களப்பு)

பட்டிருப்புத் தொகுதியில் கோட்டைக் கல்லாற்றில் 150 சுய வீடுகள் அமைப்பதற்கான ஏற்பாடுகளை தேசிய வீடமைப்பு இலாகாவினர் மேற்கொண்டு வருகிருர்கள். இவ் வீடுகள் புயலால் வீடு இழந்த குடும்பங்கட்கு வழங்கப்படவுள்ளன. (கு)

## இரகணத்தால் பார்வை குறைந்தவர்

# அனுபவம் பேசுகிறது

நமது மட்டக்களப்பு நிருபர் தமிழினியவன்

மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரி.

கண் சிகிச்சை வார்ட்டுக்குள் மெதுவாக நுழைகின்றன். அங்கு-

நடுத்தர வயதுடைய ஒரு மனிதரைச் சுற்றிப், பத்துப் பேர் கண்ணீர் மல்க, கட்டில் அருகே இருக்கின்றனர். ஒரு பெண், கைக் குழந்தையுடன் காணப்படுகின்ருர். வார்ட்டில் அனுமதிக்கப்பட்டவரின் கண் இரண்டிலும், கட்டு போடப்பட்டுள்ளது. ''ஐயோ என் கண் மணியைப் பறிகொடுத்து விட்டேனே...... என் குடும்பத்தை யார் காப்பாற்றுவார்கள்......'' என்று அக்கட்டிலில் உள்ள உருவம் முனங்குகிறது. அருகிலுள்ள அவரது இனத்தவர்கள் அழுது கொண்டே ஆறுதல் கூறுகின்ருர்கள்.

எனக்கு விபரம் புரிந்து விட்டது!

இந்த மனித உருவம் சூரிய கிரகணத்தைப் பார்த்து. கண் பார்வையைப் பறி கொடுத்திருக்கிறது.

அவரை வேடிக்கையாகப் பார்ப்பவர்கள் தான் அதிகம் அவரிடம் அப்படி என்ன ரசிப்பு இருக்கிறது? பார்வையிழந்தார்; அதுவும் கிரகணத்தால் அனுதாபப்பட வேண்டாமா?

நான் அவரின் கட்டில் அருகே சென்றேன். 'உங்களுடன் பேசவேண்டும்'' என்று சொன்னேன்.

''யார் அது! புதிய குரலாகத் தெரிகிறதே'' என்று கைகளால் என்னைத் தேடினர். நான் அவரின் கரங்களை எனது கரங்களால் பற்றினேன். ''நான் ஈழநாடு பத்திரிகை நிருபர் அதன் சார்பில் உங்களைக் காண வந்துள்ளேன்'' என்றேன் ''இதுவரை ஒரு பத்திரிகை நிருபரும் வரவில்லை நீங்கள் தான் முதலில் வந்திருக்கிறீர்கள்'' என்ருர் அவர்.

நான் அவரிடம் நடந்த விபரம் கேட்கிறேன்! அவர் கூறத் தொடங்கினர்-

''எனது பெயர் ஏ. செல்லத்துரைஎட்டுப் பிள்ளைகள் இருக்கிருர்கள். என் பிறப்பிடம் பட்டிருப்புத் தொகுதியிலுள்ள கோட்டைக்கல்லாறு. கல்முனையில் தனியார் லொறி ஒன்றில் சாரதியாகக் கடமை புரிகின்றேன்.

''சூரிய கிரகணம் நடைபெற்ற தினமான சனிக்கிழமை, நான் எனது மனைவி மக்களுக்கு கிரகணத்தைப் பற்றிக் கவனமாக இருக்குமாறு கூறிவிட்டு, பெரியகல்லாறு என்னுமிடத்தில் உறவினர் ஒருவரின் மரணச்சடங்கிற்கு சென்றேன். அப்போது சூரியகிரகணம் ஆரம்பமான நேரம்

''சற்றுத்தொலைவில் பதினைந்து பேரளவில் கூட்டமாக நின்று புகைபிடித்த கண்ணடி மூலம் சூரிய கிரகணத்தைப்பார்த்தனர். நானும் பார்க்க வேண்டுமென்ற ஆவலில் அதனூடாகப் பார்த்தேன். அப்போதொரு வித்தியாசமும் எனக்குத் தென்படவில்லை.

''மாலையாகிவிட்டதால் 6-15 மணியளவில் வேறு லொறி ஒன்றில் ஏறி எனது கிரரமத்தை அடைந்தேன். பிரதான வீதியில் இறங்கிநடந்தேன். அப்போது எனது இரு கண்களையும் ஒரு திரை மறைத்தவண்ணம் இருந்தது. எல்லாம் மஞ்சலாக தெரிந்தது. சில நிமிடங்களில் ஒன்றுமே தெரியவில்லை. நான் வேலிகளிலும், மரங்களிலும் மோதினேன். பின்னர் அவ்வழியால் வந்தவர்களின் உதவியுடன் எனது வீட்டை அடைந்தேன். மனைவி மக்களிடம் என் கண்பார்வை இழந்ததைச் சொன்னேன். அவர்கள்கதறிஅழத்தொடங்கி விட்டார்கள் அயலவர்கள்கூடி விட்டார்கள். அவர்கள்என்னை வைத்தியசாலையில் அனுமதித்தார்கள். எனது குடும்ப எதிர்காலத்தைப் பற்றிதான் கவலையாக இருக்கின்றேன்'' என்ருர்.

மறுநாள் நான் அவரைச் சந்திக்கச் சென்றேன். எனது கரங்கள் அவரது கரங்களைப் பற்றின, தம்பி வந்திட்டீங்கலடி பேப்பரில் போட்டீங்களா?' என்று கேட்டார் நான் 'ஆம்' என்றேன்.

தம்பி, இப்போது டாக்டர் போட்ட மருந்தால் கண் ஓரளவு மங்கலாகத்தெரிகின்றது. ஆனாலும் முன்னர்போல்முழுப் பார்வை வருமோ தெரியாது' என்ருர்.

''கவலைப்படவேண்டாம். நீங்கள் நிச்சயம் சுகப்படுவீர்கள்'' என்று ஆறுதல்கூறி விடைபெற்றேன்.

## கரணவாயில் இலவச சமஸ்கிருதப் பயிற்சி

(உடுப்பிட்டி)

வடமொழிப் பாடசாலை ஒன்றினை, கரணவாய் வேதாரணிய சுவாமி தேவஸ்தான ஆதீன நிர்வாக சபையினர் இந்துக்கலர்ச்சார விவகார ஆலோசனைச் சபையின் உதவியுடன் நடத்திவருகின்றனர்.

சமஸ்கிருதம், சமயம், தமிழ் சைவக்குருமார் ஆகிய பயிற்சிகள் இப்பாடசாலையில் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்து கலாச்சார விவகார ஆலோசனைச்சபை உறுப்பினரும் ஆதீன சபைக் காரியதரிசியுமான திரு. கை. திருஞான சம்பந்தக் குருக்களின் மேற்பார்வையில் நடைபெற்றுவரும் இப் பயிற்சி வகுப்புக்கள் இலவசமாகவே நடத்தப்படுகின்றன. (கு)

## விவசாயிகளை ஊக்குவிக்க நடவடிக்கை

(புலோலி)

விவசாயிகளை ஊக்குவித்து விவசாயத்துறையில் தன்னிறைவை ஏற்படுத்துவதற்கான செயற்திட்டங்களை தமிழ்ப் பகுதிப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் தொழிற்சங்கம் மேற்கொண்டு வருகின்றது இதற்கான நடவடிக்கைகளை சங்க நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். செந்துராசா மேற்கொண்டு வருகிருர்.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பிரிவிலும் மாதிரி விவசாயிகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு வேண்டிய சகல விவசாய உற்பத்திக்கான உதவிகள், உபகரணங்கள், விதைகள் நாற்றுகள் இலவசமாக வழங்கவும், வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## வைத்திய மாணவருக்கு முன்கூட்டியே வகுப்புக்கள்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களின் கல்வியாண்டுத் தொடக்கம் எதிர்வரும் ஆகஸ்ட்மாதமாகஇருந்த போதிலும் மருத்துவபீடத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆகஸ்ட்மாதத்திற்கு முன்னரேயே ஆரம்பிக்கப்படும் எனவும் எதிபார்க்கப்படுகிறது.

கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம், றுகுணு பல்கலைக் கழகங்களிலேயே மருத்துவ மாணவர்களுக்கான விரிவுரைகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதுவிடயம் சம்பந்தமாக ஜனுதிபதியும் உயர் கல்வி அமைச்சருமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன. கல்வி அமைச்சர் திரு. ரணில்விக்கிரமசிங்காவுக்கும் உயர் கல்வி அமைச்சின் செயலாருக்கும், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் செயலாளருக்கும் அறிவுறுத்தியுள்ளார். (நா-கு)

## விவாகரத்து வழக்குகள்

(புலோலி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்து வழக்குகள் யாவும் இனிமேல் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் இயங்கும் குடும்ப நீதிமன்றத்திலேயே விசாரணை செய்யப்படவுள்ளன.

# உலகப் பிரதம சாரணி ஒவேவ் பேடன் பவல்

- உ. ந. தேவகடாட்சம் -

(முன்னுள் யாழ். உதவி மாவட்ட சாரண ஆணையாளர்)

[உலகப்பிரதம சாரணி ஒவேவ் பேடன் பவல் பிறந்த தினம் இன்றாகும்.]

ஓவேவ் சென். கிளேயர் சோம்ஸ் என இளமையில் அழைக்கப்பட்ட அம்மையார் 1889ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ந் திகதி லண்டன் மாநகரில் பிறந்தார். அவரது கணவன் பேடன்பவல் பிரபு 1857ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ந் திகதி பிறந்தார். இவர்கள் 1912ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ந் திகதி திருமணம் செய்தனர். 1910ம் ஆண்டில் சாரணிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பேடன்பவல் பிரபு 1920ம் ஆண்டில் உலகப் பிரதம சாரணரானுர். 1930ம் ஆண்டில் அம்மையார் உலகப் பிரதம சாரணியாகினுர். சாரணர்கள் இவர்கள் பிறந்த தினமான இன்றைய நாளை (22-2-80) ''தாபகர்தினம்'' என்றும், பின் 1926ம் ஆண்டிலிருந்து சாரணிகள் ''நினைவு தினம்'' என்றும் விழாவெடுத்து வருகின்றனர். பேடன் பவல் பிரவு 1941ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ந் திகதியும் (83 வயது) ஒவேவ்பேடன் பவல் அம்மையார் 1977ம் ஆண்டு, ஜூன் மாதம் 26ந் திகதி (88 வயது) சீரியசேவை ஆற்றிய பின்னர் இறைக்கு அப்பாற் சென்றனர்.

இன்று அகில உலக சாரண, சாரணிகள் இச்சிறந்த புகழ் பெற்ற தலைவர்களை மிக நன்றியோடு நினைவு கூருவோமாக. நைஜீரியாவிலிருக்கும் உலகப் பிரதம சாரணரின் கல்லறையிலேயே உலகப் பிரதம சாரணியின் அஸ்தியும் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இத்தம்பதிகள் இலங்கைக்கு முதல் முதல் 1921ம் ஆண்டு விஜயம் செய்தனர். கடைசியாக இருவரும் 1934ம் ஆண்டு விஜயம் செய்தனர். அம்மையார் தனியாக 1958, 1961, 1968ம் ஆண்டுகளிலும் விஜயம் செய்தார். 1958ம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்தார்.

ஒவேவ் பேடன் பவல் அம்மையார் இறுதியாக விடுத்த செய்தி:-

''சாரணிகளே, சாரணரே, குருளைச் சாரணரே, சிறு தோழர்களே, இவர்களின் தலைவர்களே! நண்பர்களே!

''பல ஆண்டுகளுக்கு முன்னர் எல்லா நாடுகளிலும் உள்ள சிறுவர்களும், சிறுமிகளும் மேம்பாடு அடைய வேண்டும் என்ற பெருநோக்கில் எனது மதிப்புக்குரிய கணவரால் தாபிக்கப்பட்ட இயக்கத்தில் நீங்கள் எல்லோரும் உங்கள் பங்கினை மிகத்திறம்பட ஆற்றியதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன் என்பதையும் நீங்கள் என்னிடம் மிகவும் அன்புடனும் பாசத்துடனும் இருந்தமைக்கும் நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன் என்பதையும் தெரிவிக்கும் இச் செய்தியை நீங்கள் பெறும் போது நான் இந்த உலகத்தை விட்டே நீங்கியிருப்பேன்.

எல்லாம் வல்ல இறைவன் மீதும், என் கணவரும் யானும் ஒன்றுசேரும் மறுமை உலகிலும் எனக்கு மாற்ற முடியாத நம்பிக்கை உண்டு. நாமிருவரும் இணைந்து உலக குடும்பமாக ஒன்றிணைந்து பதிவு செய்து கொண்ட உங்களை மேற்பார்வை செய்வதோடு உங்கள் முன்னேற்றத்திற்கும், நல்வாழ்விற்குமாக முயன்று வருவோம்.

எங்கள் இயக்கம் வகுத்திருக்கும் வேலையையும், விளையாட்டையும் முற்ருகக் கடைப்பிடிப்பதோடு, பாசறைகளிலும், கூட்டங்களிலும் ஏற்படும் நட்புறவுகளையும், ஆனந்தமான பாடல்களையும் பேணி, உங்கள் வாக்குறுதிகமைந்து நீங்கள் சேரும் பொழுது ஏற்றுக்கொண்ட விதிகளுக்குக் கீழ்ப்படிந்து. எங்கள் இயக்கம் வழங்கும் செயல் முறைகளையும் பொழுதுபோக்குகளையும் தொடர்ந்து முழுமையாகப் பயன் படுத்துவீர்களெ நான் முற்ருக நம்புகின்றேன்.

''எமது பெருமைக்குரியது, நியாயமானது, விவேகமானது என்பதைச் செய்யும் பொழுதும், சிந்தனையிலும் செயலிலும் இரக்க முள்ளவர்களாக விளங்கும் பொழுதும், வாழுவதற்கேற்ற மகிழ்ச்சியான மேன்மையுடைய இடமாக உலகத்தை அமைப்பதற்கு உதவித் தீமைகளுக்கெல்லாம் எதிராகப் பாடுபட்டுவாழும் பொழுதும், இந்த முறைகளினுல் நீங்கள் உங்களின் உடல், மனம், உயிர் ஆகியவற்றை மேம்படுத்துவதுடன் உங்களைச் சூழ உள்ளோரையும் நிலை மாற்றுகின்றீர்கள்.

உங்களது எல்லாக் கடமைப் பொறுப்புகளிலும், நீங்கள் வெற்றிபெறுவீர்கள் என நம்புவதுடன் உங்களது வருங் காலம் முழுவதும் கடவுள் உங்களுடன் நிறைவாய் இருப்பாராக.''

## ஒஸ்மானியா—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தக ஆசிரியர் ஒருவரையும், விஞ்ஞான ஆசிரியர் ஒருவரையும் நியமிப்பதாகவும் இரண்டு வாரத்தில் தகுதியான ஒரு தற்காலிக அதிபரை நியமிப்பதாகவும் பின் மலிடத்தோடு தொடர்புகொண்டு நிரந்தர அதிபரைப் பெற்றுத் தருவதாகவும் உறுதி அளித்தார். அதைத் தொடர்ந்து மாணவர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்.

காலை முதல் நண்பகல்வரை கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்களுக்கு அயலவர்கள் நீராகாரம் வழங்கி தாகசாந்தி அளித்தனர். (கொ)

## விவாதம்

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

எவ்வளவு விலையால் அதிகரிக்கின்றதென்று கேட்டார். அப்பொழுது சபையில் சிரிப்பொலி எழுந்தது.

அண்மையில் நியமிக்கப்பட்ட புதிய அமைச்சர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்காகச் சாதாரண மக்கள் பாவிக்கும் சாராயத்தின் விலையை அதிகரிப்பது சரியா? என்றும் திரு. விஜேயசிறி சபையில் கேட்டார். (ம)

## புதிய நிர்வாகிகள்

(நெல்லியடி)

அல்வாய் தெற்கு ஞான வைரவர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாசிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்,

தலைவர்: எஸ். சிவஞானசுந்தரம் உப தலைவர்: கே. கனகசபை செயலாளர்: எஸ். கந்தையா உப செயலாளர்: ஏ. கணபதிப்பிள்ளை பொருளாளர்: கே. செல்லையா மற்றும் 9பேர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (கு)

இம் மாதம் 18ம் திகதியில் இருந்துவிவாகரத்து வழக்குகள் யாவும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்இயங்கும் குடும்ப நீதிமன்றத்திற்குப் பாரப் படுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுவளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஷாவைஈரானுக்குஅழைத்து விசாரிக்கவேண்டும்

## ஈரான் வளங்களைச் சூறையாடிய அமெரிக்கா தமது நாட்டின் பிரதமவைரியே என்கிறார் கொமெய்னி

தெஹ்ரான், பெப். 21 "ஈரானிய ஷாவை ஈரானுக்குத் திருப்பிஅழைத்து விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

ஷாவை ஈரானுக்குத் திருப்பி அனுப்புமாறும் அவர் அபகரித்துச்சென்ற ஈரானிய மக்களின் சொத்துக்களை ஈரானுக்கு அனுப்புமாறும் ஈரானிய மக்கள் அமெரிக்காவையும் மற்றும் ஷாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகளையும் கேட்கவேண்டும்''

இவ்வாறு ஈரான் புரட்சித் தலைவர் அயதொல்லா கொமெய்னி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்கா இன்னமும் ஈரானின் பிரதம வைரியே என்று தமது விசேட ஒலிபரப்புச் செய்தியில் தெரிவித்த கொமெய்னி மேலும் கூறியதாவது.

ஈரான் மக்கள், அரசியல், பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் அபிவிருத்தியடைவதை தடுத்தஅமெரிக்க பல குற்றச்செயல்களையும் புரிந்துள்ளது.

அத்துடன் நின்றுவிடாது ஈரான் வளங்களையும் அமெரிக்கா சூறையாடியுள்ளது. (இ)

### "ஷாவை விசாரிக்கும்

# ஆணைக்குழுவாரஇறுதிக்குள் ஈரான் செல்லும்

வாஷிங்டன், பெப், 21 ஈரானிய ஷா இழைத்ததாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச ஆணைக்குழு உறுப்பினர்கள் இவ்வாரமுடிவுக்குள் தெஹ்ரானுக்குச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆணைக்குழுவை ஏற்றுக் கொண்ட ஈரான் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு விளக்கம் பெற்ற பின்னரே இவர்கள் தெஹ்ரான் செல்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் ஈரான் செல்லும் இக் குழுவினருக்கு அமோக வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்பொருட்டு இக் குழுவினரின் ஈரான் விஜயத்தை சற்று தாமதிக்குமாறு ஈரான் அதிகாரிகள் கேட்டுள்ளதாக ஐ. நா. பொதுக் காரியதரிசி டாக்டர் குர்த் வால்டஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஆணைக்குழு உறுப்

(7-ம் பக்கம் பார்க்க)

# பணயக் கைதிகள் விடுதலைக்கு

## கனவான்கள் ஒப்பந்தம்

### ஆணைக்குழு உறுப்பினர் தகவல்

வாஷிங்டன், பெப். 21 ஈரான் மாணவர்கள் வசமுள்ள அமெரிக்க பணயக் கைதிகளை விடுதலைசெய்வதற்கு கனவான்கள் உடன்பாடுஒன்று செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை ஷாவின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச ஆணைக்குழு உறுப்பினர்களில் ஒருவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிடப்பட்டஉடன்பாட்டில் காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லை என்றும் அந்தஉறுப்பினர்கூறினார். (இ)

### ★ இந்துசமுத்திரத்தில் வல்லரசுகள் முற்றுகை

# ரஷ்யயுத்தக் கப்பல்கள்: 31; அமெ.யுத்தக்கப்பல்கள்: 24

வாஷிங்டன், பெப். 21

இந்துசமுத்திரத்தில் சோவியத் யூனியன் 31 போர்க்கப்பல்களை நிறுத்தி வைத்துள்ளது. இதே வேளையில் அமெரிக்காவும் 24 போர்க்கப்பல்களையே இப்பகுதியில் நிறுத்தியுள்ளது.

இவ்வாறு அமெரிக்க இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் 24 போர்க் கப்பல்களுடன் இணைந்து கொள்ள 1800 வீரர்களையும், நவீன ஆயுதங்களையும் கொண்ட 4 போர்க்கப்பல்கள் அடுத்தமாத நடுப்பகுதியில் இந்துசமுத்திரத்திற்குச் செல்கின்றன. (இ)

## உயர்தர முடிவுகள் மார்ச் நடுப்பகுதியில்

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற புதிய பாடத்திட்ட க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் மார்ச்மாத நடுப்பகுதியில் வெளியாகும் என பரீட்சைத்திணைக்கள அதிகாரிஒருவர் தெரிவித்தார். (நா)





# கவ் அன்ட் கேட் பேபி மில்க் பிளஸ்

வளர்வதற்கு மகிழ்ச்சியான முறை



குழந்தைகளுக்குச் சிறந்த உணவுச்சத்து தாய்ப்பாலென கவ் அன்ட் கேட் தயாரிப்பாளர்கள் சிபார்சு செய்கின்றார்கள்.

தாயொருவர் தாய்ப்பால் கொடுக்காதிருக்க விரும்பினால், ஆரோக்கியமாக வளரும் ஒரு குழந்தைக்கு அவசியமான எல்லா உயிர்ச்சத்துகளும் அடங்கிய நிறைவான பால் உணவொன்றை அளிக்கும் பொருட்டு, கவ் அன்ட் கேட் பேபி மில்க் பிளஸ் வைத்தியக் கலையின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றது.

உங்களுடைய குழந்தையின் தேகசுகத்தையும் போஷாக்கையும் பற்றிச்சிறந்தமுறையில் புத்திமதி கூறக்கூடியவர் வைத்தியரொருவர் அல்லது தேர்ச்சிபெற்ற மருத்துவ அதிகாரியொருவர் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும்.

ஏக இறக்குமதியாளர்களும், விநியோகஸ்தர்களும்.

பா.பா.ச. தாய்ப்பாலே மிகச்சிறந்ததென வைத்தியர்கள்கூறுகிறார்கள்.

டார்லி பட்லர் அன்ட் கம்பனி லிமிடட்

wam


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SRIDHAR** JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 and 9-30 p.m.
A GUN IN HIS SOCK, A TIRE IRON IN HIS BELT AND NO BADGE. THE STORY OF EDDIE. THE BEST EX-COP IN THE BUSINESS
**BADGE 373**
(Adults only)
Coming Soon: **CHINA TOWN**
**THAT MAN BOLT**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மென்ட் கலர்)

**SHANTHI** JAFFNA. Phone: 7642.
Daily 10-30,2-30,4-45,7 & 9-30 p.m.
The Story of the Police Elite,—
"THE SEVEN-UPS"- The Dirty - Tricks Squad.
That even the Regular cops are afraid of!
**"THE SEVEN-UPS"**
Scope—Color
"ACTION" Never seen before on a Jaffna Screen!
Coming: WATCH OUT, WE'RE MAD! —Color—

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**ஶ்ரீபால சக றன்மெனிக்கா**

**லிடோ** (யாழ்.நகர்) தினசரி 10-30, 2-30, 6-30 & 9-30
போன்: 7693
**தெய்வ மகன்**

**றீகல்** (யாழ். நகர்) போன்: 360
தினசரி 2-00, 4-30, 7-00 & 9-30
இரண்டாவது ஜனத்திரள் வாரம்
நாற்பத்திரண்டு வருடங்களில் முதல் முறையாக முக்கிய அக்கடமி பரிசுகளைத் தட்டிக்கொண்ட மகத்தான திரைக் காவியம்.
ஐந்து அக்கடமி பரிசுகள் பெற்றது.
சிறந்த படம், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த திரை ஓவியம்
**ONE FLEW OVER THE CUCKOO'S NEST**
காணத் தவறாதீர்கள்

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி: 1[illegible], 4-45, 7-00 & 9-45
JIM BROWN
in
**Slaughters Bigripoff**

**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்" இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
**இருவர் உள்ளம்**
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி.ப. 2-30, 6-15, இரவு 9-30
நாகேஷ்-முத்துராமன் ஜெயந்தி சௌகார் ஜானகி சுந்தரராஜன் நடித்த
**"எதிர் நீச்சல்"** (புதிய பிரதி)
இயக்குநர் திலகம் K. பாலசந்தரின் மற்றுமோர் வெற்றிப்படைப்பு. நீண்டகால இடைவெளியின்பின் யாழ். நகரில் திரையிடப்படும் தரமான ஒப்பற்ற காவியம். நாகேஷின் நடிப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு கண்டு களியுங்கள்.

# இன்றைய பலன்

மாசிமாதம் 10-ம் திகதி
(22-2-80)
வெள்ளிக்கிழமை

மேடம்: அவசரப் புத்தியினால் பிரச்சினைகள் உருவாகும், தனதானிய நஷ்டமும் உண்டு, திருப்தியற்ற தினம்.

இடபம்: புதுமையானசம்பவங்கள் இடம் பெறும், குறித்த காரியம் சாதகமான முடிவைத் தரும், அந்தஸ்திலும் முன்னேற்றமுண்டு.

மிதுனம்: பூமி விவகாரம் தலைதூக்கும், சதிவேலைகளும் நடக்கலாம், திடீர் பிரயாணமும் இடம்பெறும்.

கடகம்: நீண்டநாள் தடைப்பட்ட வேதனம் இன்று கைகூடும், உறவினர் மகிழ்ச்சியுண்டு, உல்லாச வாழ்வுமுண்டு, களிவான தினம்.

சிங்கம்: காதலர் வாழ்வில் கண்ணியமேற்படும், கருடப் பார்வையும் பறிபோகலாம், குடும்ப வாழ்விலும் வைத்தியச் செலவுகள் இடம்பெறும்.

கன்னி: கடமையில் நஷ்டமேற்படும், உடல் நலிவு தோன்றும், பிணிக்கு இடங்கொடாது நடக்கவும்.

துலாம்: பிறரின் நன்மதிப்பைப் பெறுவீர்கள், குடும்ப வழிக்கும் சமவிருத்தியுண்டு, தொழிலும் லாபமடையும்.

விருச்சிகம்: மனத் தளர்ச்சியேற்படும், பல தொல்லைகளாலும் பாதிக்கப்படுவீர்கள். பயணத்தின்போது பொருள் தவறலாம், கவனம் நன்று.

தனுசு: புண்ணியஸ்தல யாத்திரையொன்று மேற்கொள்ளப்படலாம், முதியவர் ஒருவரின் அறிவுரை நன்மை தரும், கடமையிலும் உயர்வுண்டு.

மகரம்: யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம், மாளிகைச் சிறப்புமுண்டு, மற்றோர்கள் ஆதரவுண்டு.

கும்பம்: மூத்தோர்கள் வாசமுண்டு, முன்னேற்ற வழியுமுண்டு, வியாபாரத் துறை விருத்திபெறும், குடும்ப மகிழ்ச்சியுண்டு.

மீனம்: எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தைத் தரும், எதிலும் இருள் சூழ்ந்த நிலை காணப்படும், எதிர்பாராத வகையில் விரையத்திற்குமிடமுண்டு.

திருமலை
க. வேலுப்பிள்ளை
56[14. ஆத்திசூடி வீதி,
யாழ்ப்பாணம்.

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
கமலஹாசன்-சுஜாதா
**உயர்ந்தவர்கள்**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரஞ்சன்-T. R. ராஜகுமாரி
நடித்த
**சந்திரலேகா**
(புதிய பிரதி)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
**வந்தாளே மகராசி**

# 'மூலப்பொருட்களைப்பாவித்து பொருள் தார ரீதியில் முன்னேற வேண்டும்'

(நெல்லியடி)

"இளைஞர்களும், யுவதிகளும் அரசாங்கத்துறை வேலைகளை எதிர்பார்த்து காலத்தை வீணடிக்காது தத்தம் பகுதிகளில் உள்ள மூலப் பொருட்களைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியில் கிராமங்களை முன்னேற்ற வேண்டும். கலை, கலாச்சாரம் என்பனவற்றின் வளர்ச்சிக்கும் இளைஞர்களாலும்யுவதிகளினாலுமே பேருதவி வழங்கமுடியும்"

இவ்வாறு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். தம்பிமுத்து வதிரி மாதர் அபிவிருத்திச் சங்கம், கிராமமுன்னேற்றச் சங்கம் என்பனவற்றின் அங்குரார்ப்பண வைபவத்தில் சிறப்புரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 'கிராமமுன்னேற்றச்சங்கங்கள் அமைக்கப்பட்டன என்று மட்டும் இருந்துவிடாது, அவ்வாறு அமைக்கப்பட்ட சங்கங்கள் கிராமத்திலுள்ள இளைஞர்க்கு வேலைவாய்ப்புகளைக் கொடுக்கக் கூடிய தொழில் துறைகளில் ஈடுபடவேண்டும் இன்றைய காலகட்டத்தில் பெருமளவிலான இளைஞர்களும்,யுவதிகளும் வேலைவாய்ப்பின்றி காலத்தை வீணேகழிக்கின்றார்கள். ஆகவே அப்பகுதிகளிலுள்ள இவ்வாறுவெர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய கிராம முன்னேற்றச் சங்கங்கள் வழிகாட்ட வேண்டும்" என்றார்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கா. சிவசுப்பிரமணியமும் உரையாற்றினார். தலைவராக திரு. க. நாகேந்திரராசா, செயலாளராக திரு. த. தர்மலிங்கமும், பொருளாளராக திரு. க. ஆனந்தராசாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (கு)

## கலாநிதி 'தஹா மயிரிழையில் உயிர் தப்பினார்

(காலி)

காலி எம். பி. கலாநிதி டபிள்யூ தஹநாயக்கா தொட்டகமுவவுக்கும் ஹிக்கடுவவுக்குமிடையில் காரில் செல்லுகையில் திரும்பும் முடக்கொன்றில் ஏற்பட்ட விபத்தில் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தார். அவருடன் அவரது கார்ச் சாரதியும் விபத்தில் சிக்கினார்.

கார் முற்றிலும் சேதத்திற்குள்ளாகியுள்ளது. கொழும்பிலிருந்து காலிக்கு கூட்டமொன்றுக்குச் செல்லுகையிலேயே இவ்விபத்து நிகழ்ந்தது.

பொலிஸ் விசாரணை நடைபெறுகின்றது. (நா)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்தப்பொதுக் கூட்டம் இம்மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை தலைவர் திரு. ஏ. விக்னேஸ்வரராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (கு)

## கைதானவர் றிமாண்டில்

(புலோலி)

தும்பளையில் இரு வாலிபர்களின் மர்ம மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒரு தொழிலாளி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தும்பளையைச் சேர்ந்த திருக்கேதீஸ்வரன். பரிமேலழகன் ஆகிய இரு வாலிபர்களும் கோவில் திருவிழாவிற்குச் சென்றிருந்தவேளையடுத்து மர்மமான முறையில் இறந்த சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிசாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டகுறிப்பிட்ட தொழிலாளியை இம் மாதம் 26 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

## ஆணைக்குழு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பினர்கள் விபரம் வருமாறு:

திரு. எச். டபிள்யு. ஜெயவர்த்தன (இலங்கை), ஜனாப் அடிட்டதலூட்டி (சிரியா), ஜனாப் முகம்மது பெட்ஜோய் (அல்ஜீரியா), திரு. லூயி எட்மண்ட் பெட்டிட்டி (பிரான்ஸ்), திரு. அன்றெஸ் அகிலர் மௌட்ஸ்லே (வெனிசூலா). (இ)

## நினைவுநாள்

[நெல்லியடி]

செபமாலை கன்னியர்சபையின் ஸ்தாபகர் அருட்திரு தோமஸ் அடிகளாரின் 16வது ஆண்டு நினைவுநாள்: அச்சுவேலி அமலிவளாம் இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அருட்திரு பாலசுந்தரம் அடிகளாரின் இரங்கற் பலிபூசையுடன் நினைவுநாள் விழா ஆரம்பமாகியது, (கு)

## மண்டலாபிஷேகம்

(சுழிபுரம்)

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நிறைவேற்றி வைக்கப்பட்டதைத் தொடந்து நாற்பத்தைந்து தினங்களும் அபிசேக ஆராதனைகள் நடைபெற்று மண்டலாபிஷேகம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தினமும் சமய விரிவுரைகள் நடைபெற்று வருகின்றன. மண்டலாபிஷேகத்தன்று சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் அபிராமியந்தாதி விரிவுரை நடைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (கு)

## பாடசாலை பஸ் சேவை

(புலோலி)

பருத்தித்துறை இலங்கைப் போக்குவரத்துச்சபை உடுப்பிட்டிப் பகுதி மாணவர்களின் நன்மை கருதி கல்லுவம்-உடுப்பிட்டியூடாக புதிய பாடசாலை பஸ் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

காலை 7-30 மணிக்கு கல்லுவத்திலிருந்து புறப்படும் இப் பாடசாலை பஸ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. வட-இந்து மகளிர் கல்லூரி,பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரிஆகிய கல்லூரிகள் வழியாக பருத்தித்துறை பஸ் நிலையத்தைச் சென்றடையுமென்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## 35வருட சேவையின் பின் ஓய்வு பெற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கடற்றொழில் விஸ்தரிப்பு உத்தியோஸ்தர் அலுவலகத்தில் கடமையாற்றிய திரு.துரைச்சாமிவைத்தியநாதன் 35 வருட அரசசேவையின் பின் அண்மையில் ஓய்வுபெற்றார்.

கொழும்புத்துறை சுவாமியார்வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மன்னார் கொழும்புயாழ்ப்பாணம்ஆகிய இடங்களில் சேவை செய்து பலரின் அன்பைப்பெற்று விளங்கினார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dilka Watch Works**
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...
8174
டில்கா வாச்வேக்ஸ்
- பஸ் நிலைய எதிர் மேல்மாடி -
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

# தி. மு. க.-இந்திரா 'காங்கிரஸ் எதிர்ப்புக் கூட்டணி

சென்னை, பெப். 21 தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு நடைபெறவிருக்கும் தேர்தலையொட்டி எதிர்க்கட்சிக் கூட்டமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பாக அ. தி. மு. கழகமும் வேறு 13 எதிர்க்கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் நேற்று ஆலோசனை நடத்தினார்கள்.

கொழும்புநகரில் நடைபெறும்
நிகழ்ச்சிபோல்
யாழ்ப்பாணத்திலும்....
2-3-80 ஞாயிறு மாலை
துரையப்பா விளையாட்டரங்கு
ஆழிக்குமரன் ஆனந்தனுடன்
ஒரு மாலைப்பொழுது.
சிறந்த நடன அழகிகளுடன்
ஆடல், பாடல், கராட்டி
டிக்கற்: ரூ. 25, 15. 10, 5.
பல்க்கன் ஏஜென்சி
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

யாழ். மாநகரசபை ஊழியரின்

## சம்பளப் பட்டியலைக் கிழித்த ஊழியர் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை ஊழியரின் சம்பளப் பட்டியலை சுக்கு சுக்காக கிழித்தெறிந்த மாநகரசபை ஊழியர் ஒருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

சுகாதாரப் பகுதி சிருப்பர் திரு.தம்பிஐயா சிவபாலன் நேற்றுமுன் தினம் நண்பகல் 1 மணிக்கு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கிக்கொண்டிருந்தபோது இச் சம்பவம் நடந்தது.

தற்காலிக காவலாளியாக கடமை யாற்றிய டேவிட் ரேட்டைச் சேர்ந்த ஏபிரகாம் என்பவர் சென்று சம்பளப் பட்டியலைப் பறித்து இரண்டு.மூன்று துண்டுகளாக கிழித்து எறிந்தாராம்.

இது பற்றி யாழ்ப்பாண பொலிசில் புகார்செய்யப்பட்டதைதொடர்ந்து சப்-இன்ஸ்பெகடர் முனதாச' அவரைக் கைது செய்துள்ளார்.

பொலிஸ் கான்ஸ்டபிள் கே. குமாரசூரியர் இதுசம்பந்தமான புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளார். (கொ-கு)

இராமநாதன் கல்லூரி சம்பளப்பணம்:

## பாதுகாப்புக்குச் சென்ற பொலிஸ் துப்பாக்கி தவறி வெடித்தது!

(மருதனமடம்)

ஆசிரியர்களுக்கான சம்பளப் பணத்தை யெடுக்கச் சென்றவர்களுடன் பாதுகாப்புக்குச் சென்ற பொலிசாரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் பொலிசார் ஒருவர் காயத்துக்குள்ளானர்.

நேற்று முன்தினம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர்களது சம்பளப் பணத்தை சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையில் இருந்து எடுத்து வருவதற்காகப் பாதுகாப்பிற்குச் சென்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கு)

## 'தேவா' வுக்கு எந்த இலாகாக்கள்

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது உள்நாட்டலுவல்கள் அமைச்சு தனியான அமைச்சாக பிரிக்கப்பட்டுவிட்டபோதும் அதன்கீழ் வரும் இலாகாக்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

திரு. கே. டபிள்யூ, தேவநாயகத்தை அமைச்சராகக் கொண்ட இவ்வமைச்சு முன்னர் பொதுநிர்வாக அமைச்சுடன் இணைந்திருந்தது. (கு)

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி,
மதுரை, பம்பாய்,
கோலாலம்பூர்,
சிங்கப்பூர், பரிஸ்,
லண்டன், துபாய்,
சவூதி அரேபியா,
கனடா
ஆகிய நாடுகளுக்கு
அழைத்துச் செல்ல

மற்றும்
பாஸ்போட்,
அமெரிக்கன்
டிறவலர்ஸ் செக்
உலகின் எப்பகுதிக்கும்
விமான டிக்கட்,
சுற்றுலாக்கள்
ஆகிய உங்கள்
தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்.,
தபால்பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது

### சிகரெட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து 15 வீதமாக அதிகரிக்கப்படுகிறது. இந்த வரி அதிகரிப்பை சீனிக் கூட்டுத்தாபனம் ஏற்பதால் சீனியின் தற்போதைய விலையில் மாற்றமில்லை.

**பீடி இலை, பிஸ்கட், கைக்கடிகாரங்கள்**

இவற்றைவிட பீடி இலை பிஸ்கட், கைக்கடிகாரங்கள், ரெலிவிஷன், 9 பேருக்குமேல் பிரயாணம் செய்யும் கார், வான், 1750 கிலோகிறாமிற்கு மேற்பட்ட லொறிகளின் இறக்குமதி வரியும் 5 வீதத்திலிருந்து 12½ வீதமாக அதிகரிக்கிறது.

இந்த விலை அதிகரிப்புமாற்றங்களினால் அரசாங்கத்திற்கு 25 கோடி ரூபா வருமானமாகக் கிடைக்குமென்று நிதி, திட்டமிடல் பதிலமைச்சர் ஐனுப் நெய்னு மரிக்கார் நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

### அரசு உத்தரவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலைக்கு தமிழ்நாடு அரசு அனுமதி மறுத்திருந்ததை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

அரசு உத்தரவை எதிர்த்து திராவிடக் கழகக் கிளை தாக்கல் செய்திருந்த ரிட்மனுவை சென்னை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அரசுஉத்தரவை தள்ளுபடி செய்தது.

காஞ்சிபுரத்தில் கங்கை கொண்டான் மண்டபத்துக்கருகே இந்தச் சிலையை நிறுவ திராவிடக் கழகம் திட்டமிட்டிருந்தது.

### தென்னக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாட்டரங்கிலும் கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்கள்.

காங்கேசன்துறையில் ஒரு ஹாஸ்ய நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் தென்னக நடிகர்கள், யாழ். நகரில் "கலையமுதம்" புதுமைக் கதம்ப நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பு விருந்தளிப்பார்கள்.

நடிகர்கள் நாகேஷ், ஜெய்சங்கர், அசோகன் நாளைக் காலை கொழும்பு திரும்புவார்கள்.

**மரண அறிவித்தல்**

திருமதி
மனோரஞ்சிதவல்லி
சின்னப்பா

அவர்கள் காலமாகி விட்டார். இவர் திருநெல்வேலி புறக்டர் சின்னப்பாவின் அன்பு மனைவியும், இங்கிலாந்து டாக்டர் பரமேஸ்வரி, இங்கிலாந்து பொறியியலாளர் யோகராசா, கொழும்பு டாக்டர் சிவரஞ்சினி ஸ்ரீஸ்காந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும் கொழும்பு பொறியியலாளர் ஸ்ரீஸ்காந்தன் லதா ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை 4-00 மணியளவில் திருநெல்வேலியில் நடைபெறும். 5034

## விவாதம் நடத்த 'அமிர்' வற்புறுத்து

(காழும்பு)

விலை அதிகரிப்புப் பற்றிய அமைச்சரின் அறிக்கை ஒரு புதிய வரவு செலவுத் திட்டம் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்து, இதுசம்பந்தமாகப் பாராளுமன்றத்தில் விவாதிக்கச் சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா இவ்விலை அதிகரிப்பு அறிக்கை சம்பந்தமாக இன்று பாராளுமன்றத்தில் விவாதிக்கச் சந்தர்ப்பமளிக்கப்படுமென்றார்.

நிதி திட்டமிடல் பதிலமைச்சர் நெய்னுமரிக்கார் விலை அதிகரிப்புப்பற்றிய அறிக்கையை சபையில் வாசித்துக் கொண்டிருக்கையில் இடையில் குறுக்கிட்ட ஹரிஸ்பத்துவத் தொகுதியின் 2-வது பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. விஜேயசிறி சாராயம்

(5-ம் பக்கம் பார்க்க)

**மரண அறிவித்தல்**

திருமதி
தவமணி ஞானப்பிரகாசம்

திருமதி தவமணி ஞானப்பிரகாசம் காலமானார். இவர் திருஞானம் அவர்களின் தாயாரும், திருமதி நேசம்மா அவர்களின் மாமியாரும், யோகேஸ்வரன், மனோகரன், ஆகியோரின் பேத்தியாரும் பாலசுப்பிரமணியம் (வைத்திலிங்கம் அன் கம்பனி, கொழும்பு) அவர்களின் பெரியதாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அராலி வடக்கு மயானத்தில் இன்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும். உற்றுர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 5035

**மரண அறிவித்தல்**

**மிக்கேல் பிள்ளை**

மயிலிட்டி, மிக்கேல்பிள்ளை அன் சன்ஸ் உரிமையாளர் திரு. ஏ. மிக்கேல்பிள்ளை காலமானர். இவர் சிசிலியாவின் அன்புக்கணவரும், ஞானமலர், ஞானப்பிரகாசம்துரை, ஞானரஞ்சிதம், ஞானரட்ணம், ஞானனந்தம், ஞானமிர்தம், ஞானகுணரட்ணம், ஞானகுலேந்திரன், (சீனு) ஆகியோரின் அன்புத் தந்தையும், மனுவேல்பிள்ளை(உரிமையாளர் K.L.அந்தோனிப்பிள்ளை அன் சன்ஸ்) இம்மனுவேல் (சுங்கத் திணைக்களம்) பிலிப் (உணவுத் திணைக்களம்) தேவசகாயம் .(ஒலிபன்ட் எஸ்ரேற்) பெனடிற்றம்மா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 23-2-80 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு காணிக்கை மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

5033

**மரண அறிவித்தல்**

**திருமதி ஆச்சிப்பிள்ளை துரையப்பா**

தொல்புரம் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் இ. துரையப்பாவின் அன்பு மனைவி காலமானார். இவர் திரு. து. இராசரத்தினம், திருமதி மனோன்மணி சிவஞானசுந்தரம், திரு. து. நடராசா அவர்களின் தாயாரும், திரு. ச. சிவஞானசுந்தரம், திருமதி நாகரத்தினம், திருமதி சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியாரும், மலேயன் பென்சனியர் திரு. A. பொன்னையாவின் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் திருவடிநிலை மயானத்தில் நேற்று (21-2-80) பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

துரையப்பா அன் சன்ஸ்,
தொல்புரம்.

21-2-80 பத்திரிகைவிளம்பரத்தில் இன்று (2-12-80) என ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம். 5025

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org